# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 97/2018

Prosecution Witness 5

| | | | |
|---|---|---|---|
| Name | : பொங்கியான் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.மந்திரி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of May 2024.

(Accused present)

முதல் விசாரணை :

1. நான் தற்போது வடுகபாளையத்தில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அசா 1 எனது உறவினர் மகள் ஆவார். ஆஜர் எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர் ஆவார். அசா 1க்கும் எதிரிக்கும் இடையே பழக்கம் இருந்தது சம்மந்தமாக கடந்த 2016 ம் ஆண்டு ஒருநாள் போலீசார் வந்து விசாரித்தார்கள். அசா 1ன் வீட்டை போலீசார் படம் வரைந்தார்கள்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கைரேகை என்னுடையதுதான். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. அசா 1க்கும் எதிரிக்கும் பழக்கம் இருந்ததாக அசா 1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு போலீசார் விசாரிக்க வந்தபோதுதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் வீடு அசா 1ன் வீட்டில் இருந்து சிறிது தொலைவு தள்ளி உள்ளது. அசா 1ன் வீட்டிற்கு அருகில் என் தந்தை குடியிருக்கிறார். அசா 1 புகார் கொடுக்கையில் நானும் அவருடன் இருந்தேன்.

2. அசா 1ன் பெற்றோர் அசா 1ஐ திருமணம் செய்துகொள்ளுமாறு எதிரியிடம் கேட்டார்கள் என்றால் சரிதான். அதற்கு எதிரி மறுத்தால் போலீசார் எதிரியை கைது செய்தார்கள் என்றால் சரிதான். நான போலீசார் கேட்டுக்கொண்டதால் ஒரு தாளில்

கைரேகையிட்டேன் என்றால் சரிதான். நான் கைரேகை இட்ட தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அசா 1ன் வீட்டிற்கு அருகில் வீடுகள் உள்ளன என்றால் சரிதான். அசா 1ன் வீட்டிற்கு யாரேனும் வந்தால் அருகில் உள்ள வீட்டில் வசிக்கும் நபர்களுக்கு தெரியும் என்றால் சரிதான்.

3. நான் அசா 1ன் தந்தை கேட்டுக்கொண்டதால் சாட்சியமளிக்க வந்தேன் என்றால் சரியல்ல, நான் படம் வரையும் போது அங்கு இருந்தேன். அசா 1ன் வீட்டில் ஒரே ஒரு அறை மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். கழிப்பிடத்திற்கு வீட்டிற்கு வெளியேதான் செல்லவேண்டும் என்றால் சரிதான்.

4. சம்பவம் நடந்ததாக கூறப்படும் காலத்தில் அசா 1ன் பாட்டி எப்போதும் திண்ணையில் உட்கார்ந்து இருப்பார் என்றால் சரிதான். எதிரியும் அசா 1ம் எந்த காலத்திலும் பழகவில்லை என்றால் சரியல்ல. அசா 1ன் தந்தை எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிகிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.